**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 01 - 2019**

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 01 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 3267–(எஸ்ஆர்ஜ) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.06 (அ) உறுப்புரை மற்றும் 3268–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.03 (அ) உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்டிக்கைகளின் பிரகாரம், மகாவலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்டப் பகுதியில் விவசாயம் மற்றும் குடிநீர் நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 28,713 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 190 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 22,668 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 6,045 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 செப்தெம்பர் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் 03 பிரதான கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

| கூறுகள் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| உயர்நில எலகர கால்வாய் நிர்மாணம் | 60 | 38 | ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம் மற்றும் ஒப்பந்ததாரர்களால் வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுதல் | வேலைகளை பூர்த்தி செய்வதிலுள்ள தாமதங்கள் மற்றும் கிரய அதிகரிப்புக்களிற்கான சாத்தியம் | ஒப்பந்தத்தின் கீழான நடவடிக்கைகள் தாமதங்களுடன் தொடங்கப்பட்டிருந்தன. |
| வடமேல் மாகாண கால்வாய் நிர்மாணம் | 65 | 30 | ஒப்பந்தமொன்றை வழங்குவதிலுள்ள தாமதங்கள் மற்றும் வழங்கப்பட்ட வேறு 02 ஒப்பந்தங்களின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட வேலைகளின் மெதுவான முற்னேற்றம் | எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பங்குடமையாளர்களிற்கு கிடைத்திருக்கவில்லை. | வேலை வடிவமைப்பு குறைபாடுகள் மற்றும் காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள் காரணமாக |
| மினிப்பே இடதுகரை புனரமைப்பு | 74 | 48 | ஒப்பந்ததாரர்களால் ஒப்பந்த நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதில் மெதுவான முற்னேற்றம் | எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பங்குடமையாளர்களிற்கு கிடைத்திருக்கவில்லை. | சிவில் நிர்மாண வேலை வடிவமைத்தல் குறைபாடுகள் காரணமாக |

முகாமைத்துவத்தின் பதில்

உயர்நில எலஹர கால்வாய், வடமேல் மாகாண கால்வாய் மற்றும் மினிப்பே இடதுகரை கால்வாய் புனரமைப்பு என்பவற்றின் நிர்மாணம் தொடர்பாக 2020 மே 01 இல் உள்ளவாறான தற்போதைய செயன்முன்னேற்றம் முறையே 40%, 32%, மற்றும் 62% ஐ அடைந்திருந்தன.

கணக்காய்வாளரின் பரிந்துரை

செயற்திட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கால வரையறையினுள் சிக்கனமான கிரயத்தில் வேலைகளை பூர்த்தி செய்யக்கூடியவாறு ஒப்பந்த வேலைப் பொதிகளின் கீழ் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சிவில் நிர்மாண வேலைகள் மிகவும் உன்னிப்பாக கண்காணிக்கப்பட வேண்டும்.

**2.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் பட்டியலில் சிறிய குளங்களின் புனரமைப்பு உள்ளடக்கப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டின் போது வடமேல் மாகாண கால்வாய் செயற்திட்டத்தின் கீழ் 50 சிறிய குளங்களை புனரமைப்பதற்காக பாதீட்டில் ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் சிறிய குளங்களை புனரமைப்பதற்கான மொத்தக் கிரய மதிப்பீடு பெறுகை வழிகாட்டலின் 4.3.2 இன் பிரகாரம் வரிசை அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தற்போது வரை அங்கீகரிக்கப்பட்டிருக்காத பகுதி–3 இன் ஐசீபீ–4 ஒப்பந்த வேலைப்பொதியை பூர்த்தி செய்த பின்னர் நீர் திசைதிருப்பத்துடன் மேற்படி குளங்களின் நீர் வழிந்தோடும் சரிவு முறைமையை வழங்க முடிந்திருந்தது. | ஒப்பந்தக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | குறிப்பிடப்பட்ட விடயம் இணங்கப்படுகின்றது. தேசிய பாதீட்டு திணைக்களத்திடமிருந்து ரூபா 2,310 மில்லியன் பாதீட்டு ஏற்பாடு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் பாதீட்டுக் கட்டுப்பாடுகள் காரணமாக ஒதுக்கீடுகள் பெறப்பட்டிருக்கவில்லை.<br>ஆகையால் அமைச்சு பாதீட்டின் கீழ் 50 சிறிய குளங்களை புனரமைப்பதற்கு ரூபா 200 மில்லியன் தொகையை மஹாவலி அமைச்சு ஒதுக்கீடு செய்திருந்த போதிலும் நிதி கட்டுப்பாடுகள் காரணமாக ஒரு குளம் மாத்திரம் ஆரம்ப செயற்திட்டமொன்றாக புனரமைக்கப்பட்டிருந்தது.<br><br>எம்டபிள்யூஎஸ்ஐபியின் பகுதி 03 கடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு வேண்டுகோளொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அவை தொடர்பான மேலதிக வேலைகள் மற்றும் கிரயங்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மகாவலி நீர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 1 இன் கீழ் வழங்கப்பட்ட ஒன்பது வேலைப் பொதிகளில் ஆறு ஒப்பந்த வேலைப் பொதிகள் ஒப்பந்த காலப்பகுதி பூர்த்தியடைவதனுள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மிகுதி மூன்று ஒப்பந்த வேலை பொதிகள் எதிர்பார்க்கப்பட்ட | ஒப்பந்தக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | குறிப்பிடப்பட்ட விடயம் இணங்கப்படுகின்றது.<br>ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம், நீண்ட பெறுகை செயன்முறை, ஏடிபீ இடமிருந்து அனுமதியை | நிகழ்ச்சித்திட்டம் அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செயன்முன்னேற்றத்தை அடைந்திருக்கவில்லை. மேலும், 2017 இல் வழங்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட என்டபிள்யூபிசீபி – ஐசீபீ – 01 ஒப்பந்த வேலைப் பொதி 2019 திசெம்பர் 31 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதம், ஒப்பந்ததாரர்களின் திரவ பிரச்சனைகள், ஒப்பந்தத்தை தாமதித்தல் மற்றும் வழக்கமான நீர் பிரச்சினைகள் மற்றும் வெள்ளம் காரணமாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. தெரிவு செய்யப்பட்ட என்டபிள்யூபிசீபி ஐசீபீ 01 கேள்வியாளர், சீஎம்எல் பிறைவேட் லிமிட்டட் ஒப்பந்தத்தை இறுதியாக்கும் போது நிதி நெருக்கடியொன்றில் காணப்பட்டது. அமைச்சரவையால் நியமனம் செய்யப்பட்ட கேள்விச் சபை இவ் ஒப்பந்தத்தை வழங்காது மீள கேள்வி கோரியிருந்தது. என்டபிள்யூபிசீ – ஐசீபீ 01 ஒப்பந்தத்தை 2020 ஆம் ஆண்டின் 3 ஆவது காலாண்டில் வழங்குவதற்கு திட்டமிடப்படுகின்றது. | |
| (இ) | மதியுரை சேவைகளிற்காக ரூபா 543 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மதியுரைச் சேவைகளிற்காக பாதீட்டு ஒதுக்கீடுகளை விஞ்சி 157 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 1,396 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | ஒப்பந்தக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | குறிப்பிடப்பட்ட விடயம் இணங்கப்படுகின்றது. முரண் 03 இற்காக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் முன்னைய ஆண்டுகளின் நிலுவை மதியுரை கொடுப்பனவுகளை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | செலவினங்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 களப் பரீட்சிப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | வடமேல் மாகாண கால்வாய் நிர்மாணத்தின் கீழான வீமதில்ல இடதுகரை பிரதான கால்வாய் புனரமைப்பு வேலைகள் மற்றும் கிளைக் கால்வாய் நிர்மாணம் என்பவற்றிற்கான ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கான காலப்பகுதி 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்திருந்த போதிலும் 60 இடங்களில் காணப்பட்ட பாலங்கள், குளிக்கும் படிகள் மற்றும் திசைதிருப்பும் கட்டமைப்புக்களின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் 24 இடங்கள் தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. காணிப் பிரச்சினைகள் தொடர்பான மோதல்களின் காரணமாக வேலைகளை பூர்த்தி செய்வதற்கான கால நீடிப்பானது 2020 நவம்பர் 04 வரை மேலும் 2 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | குறிப்பிடப்பட்ட விடயம் இணங்கப்படுகின்றது. 60 இடங்களிலுள்ள பாலங்கள், குளிக்கும் படிகள் மற்றும் திசைதிருப்பும் கட்டமைப்புக்களின் புனரமைப்பு வேலைகள் முன்னேற்றத்தில் காணப்படுகின்றதுடன் 2020 யூலை 15 அளவில் பூர்த்தி செய்யப்படும். 24 இடங்களில் 20 இடங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | நிகழ்ச்சித்திட்டமானது எதிர்பார்க்கப்படாத தாமதங்கள் மற்றும் செலவினங்களை இழிவுபடுத்த வேண்டும். |
| (ஆ) | நபதகஹவத்தை தொடக்கம் மஹகிதுல வரையான நீர்த்தேக்க பிரதான கால்வாய் மற்றும் சுரங்கப் பாதை நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 சதவீத பௌதீக செயன்முன்னேற்றத்தை எதிர்பார்த்திருந்த போதிலும் 6 சதவீத செயன்முன்னேற்றம் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. கொறகஹகொல்ல நீர்த்தேக்கத்தின் 3 கிலோமீற்றர் 600 மீற்றர் பகுதிக்குச் சொந்தமான பல்வேறு வகையான | ஒப்பந்தக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | குறிப்பிடப்பட்ட விடயம் இணங்கப்படுகின்றது. 2020 மே 31 இல் உள்ளவாறான பௌதீக செயன்முன்னேற்றம் தற்போது 25% ஐ அடைந்திருந்தது. கால்வாய் நிர்மாணம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செயல்நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட | நிகழ்ச்சித்திட்டம் அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மரங்கள் அகற்றப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரை கால்வாய் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தின் பயன்பாட்டிற்காக தேவகுவ நீர்ப்பாசன முகாமின் புனரமைப்பு மற்றும் திருத்தங்களிற்காக ரூபா 10 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்படி முகாமின் புனரமைப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளாமல் வாடகைச் செலவினம் மற்றும் அலுவலக உபகரண கொள்வனவிற்காக ரூபா 52 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | | செயன்முன்னேற்றத்தை எதிர்கொள்வதற்கு நாங்கள் வேலையை துரிதப்படுத்துவோம். தேவகுவ நீர்ப்பாசன முகாம் பாழடைந்த நிலையில் காணப்படுவதன் காரணமாக அதனை திருத்தம் செய்வது பயனற்றதாக இருந்தது. இதனால் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மதியுரை ஒப்பந்த உடன்படிக்கையின் கடப்பாடுகளின் பிரகாரம் வதிவிட பொறியியல் அலுவலகம் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் தேவையான அலுவலக உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | |
| (இ) | உயர்நில எலஹர கால்வாய் ஐசீபீ-01 ஒப்பந்த வேலைப்பொதி தொடர்பான எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் 65 சதவீதமாக காணப்பட்ட போதிலும் உள்ளபடியான செயன்முன்னேற்றம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 44 சதவீதமேயாகும். மேலும் 5 இடங்களிலுள்ள 872 மீற்றர் நிர்மாண வேலைகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்படாத தாமதங்கள். இது மேலதிக நிதித் தேவைப்பாட்டை உருவாக்கக்கூடும். மேலும் இது விவசாய நடவடிக்கைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். | குறிப்பிடப்பட்ட விடயம் இணங்கப்படுகின்றது. 2020 மே 31 இல் உள்ளவாறான தற்போதைய செயன்முன்னேற்றம் 46% ஆக உள்ளது. திருத்தம் செய்யப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வேலையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித்திட்டம் அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

**2.4 குறைப்பயன்பாட்டு வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| பொல்பித்திகம செயற்திட்ட அலுவலக கட்டிடத்தில் பிரதம வதிவிடப் பொறியியலாளர் மற்றும் வதிவிடப் பொறியியலாளர்களிற்கு அலுவலக வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அலுவலக வசதிகளை வழங்குவதற்காக ரூபா 2,160,000 கிரயத்தில் மூன்று தனியார் கட்டிடங்கள் வாடகைக்கு பெறப்பட்டிருந்தன. | ஒப்பந்தக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | குறிப்பிடப்பட்ட விடயம் இணங்கப்படுகின்றது. செயற்திட்ட வேலைத்தளங்கள் பொல்பித்திகம அலுவலகத்திலிருந்து வெகுதூரத்தில் அமைந்துள்ளன. செயற்பாட்டுக் கிரயங்களை இழிவுபடுத்துவதற்கும் நீண்ட பிரயாண நேரங்களை சேமிப்பதற்கும் கட்டிடங்கள் வாடகைக்கு பெறப்பட்டிருந்தன. ஏற்கனவேயுள்ள வேலைத்தளங்கள் பூர்த்தியடைந்ததும் அவர்கள் பொல்பித்திகம அலுவலகத்திற்கு இடம்மாற்றப்படுவார்கள். | நிகழ்ச்சித்திட்டம் சிக்கனமற்ற செலவினத்தை இழிவுபடுத்த வேண்டும். |

**2.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| திருத்தம் செய்யப்பட்ட பயிற்சித் திட்டத்தில் செலவினங்கள் உள்ளடக்கப்பட்டிருக்காத போதிலும் ரூபா 7,693,956 மற்றும் ரூபா 8,730,545 தொகைகள் முறையே 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது வெளிநாட்டுப் பயிற்சிக் கற்கைநெறிகளிற்காக செலவிடப்பட்டிருந்தன. | நிகழ்ச்சித்திட்டக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | குறிப்பிடப்பட்ட விடயம் இணங்கப்படுகின்றது. பயிற்சி பாதீடுகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. திருத்தம் செய்யப்பட்ட பாதீட்டின் பிரதிகள் இணைக்கப்படுகின்றன. | நிகழ்ச்சித்திட்டம் பயிற்சித்திட்டத்தை பின்பற்ற வேண்டும். |